# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302

## யுகங்களில் தேவனுடைய திட்டம்
## பெரிய, சிறிய உடன்படிக்கைகள்

**முன்னுரை :**

தேவன் மனிதனோடு ஏற்படுத்தும் ஒரு 'ஒப்பந்தமே' உடன்படிக்கை. வேதாகமம் 8 வகையான உடன்படிக்கைகளை வெளிப்படுத்துகிறது. சில உடன்படிக்கைகள் நிபந்தனையானது. சில உடன்படிக்கைகள் நிபந்தனையற்றது. சில உடன்படிக்கைள் ஒரு மனிதனோடு ஏற்படுத்தப்பட்டதாயிருக்கிறது. சில உடன்படிக்கைகள் ஒரு ஜாதியோடு ஏற்படுத்தப் பட்டதாயிருக்கிறது. வேதத்தில் காணப்படுகிற 8 உடன்படிக்கைகளில் 4 பெரிய உடன்படிக்கைகளாகவும், 4 சிறிய உடன்படிக்கைகளாகவும் இருக்கின்றன. சில உடன்படிக்கைகள் தற்காலிகமானது, சில உடன்படிக்கைகள் நித்தியமானது, மாறாதது, மாற்ற முடியாதது. யுகங்களில் தேவனுடையத் திட்டத்தை இந்த உடன்படிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. இந்த உடன்படிக்கைகள் ஆதாம் உருவாக்கப்பட்ட நாளிலிருந்து புதிய வானம், புதிய பூமி உருவாகும் வரைக்கும் உள்ள முழு வரலாற்றையும் உள்ளடக்குகிறதாயிருக்கிறது. இந்த உடன்படிக்கைகளை குறிப்பாக தங்களை அர்ப்பணம் செய்த வேதாகம மாணவர்களும், வேதத்தை நேசிக்கும் கிறிஸ்தவர்களும் தெளிவாக அறிந்துகொள்வது நல்லது. தேவனுடைய நித்தியமான, மகிமையான திட்டத்தையும், வேதவெளிப்பாட்டையும், உங்களுக்கு காண்பிக்கும் பொருட்டு இப்பாடத்தை வழங்கியுள்ளோம். இதுவே எங்களது முக்கிய நோக்கமும், விருப்பமும் ஆகும்.

### இப்பாடத்தின் முக்கியத்துவம் :

தேவன் மனிதனோடு ஏற்படுத்திய உடன்படிக்கைகளைக் குறித்ததான சரியான அறிவு இல்லாதபோது, வேதத்தைச் சரியாக, முழுமையாக விளங்கிக்கொள்ள முடியாது என்பதை நிரூபிப்பதே இப்பாடத்தின் பிரதான நோக்கமாகும். இந்த உடன்படிக்கைகள் யுகங்களுக்கு ஏற்றாற்போல் அமைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். 'ஏற்பாடு' என்ற வார்த்தையின் பொருள் 'உடன்படிக்கை' ஆகும். எனவே நமது வேதாகமம் பழைய, புதிய ஏற்பாடுகளை அல்லது உடன்படிக்கைகளைக் கொண்டதாய் இருக்கிறது. தேவனுடைய முழுமையான வெளிப்பாடானது படிப்படியானதும், திறக்கப்பட்டதுமாயிருக்கிறது. இவைகளைப் பார்த்து அறிந்துகொள்வது மிகவும் முக்கியம். முடிந்துபோனவை எவை? நித்தியமானவைகள் எவை? என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். தேவனுடைய திட்டத்தையும், அவருடைய உடன்படிக்கைகளையும் நீங்கள் அறிந்துகொள்ளும் பொழுது அவர்தாமே உங்களுக்க மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுப்பாராக.

<u>குறிப்பு :</u>

இந்த உடன்படிக்கையின் நோக்கம் காரணமாக அநேக வேதவசனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றைக் கவனமாகப் படிக்கும் பொருட்டு இரண்டு பாடங்களாக இதை வழங்க நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

### யுகங்களும், அதற்குத் தொடர்புடைய உடன்படிக்கைகளும்

1. **அறியாமை :**

   ஏதேன் தோட்டத்தில் உடன்படிக்கை – ஆதியாகமம் 2:16

2. **மனசாட்சி :**

   ஆதாமுடன் உடன்படிக்கை – ஆதியாகமம் 3:15

3. **மனித அரசாங்கம் :**

   நோவாவுடன் உடன்படிக்கை – ஆதியாகமம் 9:16

4. **வாக்குத்தத்தம் :**

   ஆபிரகாமுடன் உடன்படிக்கை – ஆதியாகமம் 12:2

5. **நியாயப்பிரமாணம் :**

   மோசே – யாத்திராகமம் 19:5

பாலஸ்தீனதேசம் – உபாகமம்30:3

தாவீது – 2 சாமுவேல் 7:11

**6. கிருபை :**

புதிய உடன்படிக்கை – எபிரெயர் 8:8

**7. இராஜ்ஜியம் :**

பாலஸ்தீன தேசம் – புதிய தாவீதின் இராஜ்ஜியம்

**உடன்படிக்கையின் விளக்கம் :**

தேவன் மனிதனோடு ஒரு மாறாத ஒப்பந்தத்தை ஏற்படுத்தி அதை நிறைவேற்றுவதற்கான பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொள்கிறார். "நானே கர்த்தர் அதை நிறைவேற்றுவேன்."

**உடன்படிக்கையின் தன்மை :**

ஏதேன் தோட்டம், ஆதாம், நோவா, மோசே, இவை நான்கும் சிறிய உடன்படிக்கைகள் என்று அழைக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கைகள் தற்காலிகமானது, நிபந்தனையுள்ளது. ஆபிரகாம், பாலஸ்தீன தேசம், தாவீது, புதிய உடன்படிக்கை, இவை நான்கும் நித்தியமானது, நிபந்தனையற்றது,

**உடன்படிக்கையின் சிறப்பியல்புகள் :**

1. தேவன் ஒரு மனிதனோடு (ஆதாம்) செய்த உடன்படிக்கை – ஆதியாகமம் 2:16
2. தேவன் மனிதஇனத்தோடு (நோவா) செய்த உடன்படிக்கை – ஆதியாகமம் 9:9
3. தேவன் இஸ்ரவேல் ஜாதியோடு செய்த உடன்படிக்கை – யாத்திராகமம் 19:3
4. தேவன் ஒரு குடும்பத்தோடு (தாவீதின் குடும்பம்) செய்த உடன்படிக்கை – 2 சாமுவேல் 7:16
5. தேவன், கிறிஸ்து சிந்திய இரத்தத்தில் விசுவாசம் வைக்கும் எல்லோரோடும் செய்த உடன்படிக்கை – மத்தேயு 27:28; 1 கொரிந்தியர் 11:25; எபிரெயர் 9:20–23.

## தேவன் ஏற்படுத்திய எட்டு உடன்படிக்கைகளின் நோக்கம் :

**1. ஏதேன் தோட்டத்தில் உடன்படிக்கை :**

ஆதியாகமம் 2:16 – அறியாமையின் காலத்தில் வாழ்ந்த ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட நிபந்தனை.

**2. ஆதாமுடன் உடன்படிக்கை :**

ஆதியாகமம் 3:15 – விழுந்துபோன ஆதாமின் நிலையும், மீட்பர் வருவார் என்ற வாக்குத்தத்தமும்.

**3. நோவாவுடன் உடன்படிக்கை :**

ஆதியாகமம் 9:16 – மனித அரசாங்கத்தின் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவது.

**4. ஆபிரகாமுடன் உடன்படிக்கை :**

ஆதியாகமம் 12:2 – இஸ்ரவேல் தேசத்தின் ஆரம்பம், மீட்பின் வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்துதல்.

**5. மோசேயுடன் உடன்படிக்கை :**

யாத்திராகமம் 19:5 – அனைவரையும் தண்டனைக்குட்படுத்துகிறது.

**6. பாலஸ்தீன தேசம் – இஸ்ரவேலருடன் உடன்படிக்கை :**

உபாகமம் 30:3 – இஸ்ரவேல் ஜனங்களின் மனந்திரும்புதலும், இறுதியாக தேசத்தில் சேர்க்கப்படுதலும்.

**7. தாவீதுடன் உடன்படிக்கை :**

2 சாமுவேல் 7:16 – தாவீதின் குடும்பத்தில் கர்த்தராகிய கிறிஸ்து பிறந்தார் (மத்தேயு 1:1; லூக்கா 1:33). தாவீதின் இராஜ்ஜியம் கிறிஸ்துவுக்குள்ளாக நிறைவேறும் (அப்போஸ்தலர் 15:14–17)

**8. புதிய உடன்படிக்கை :**

எபிரெயர் 8:8 – கிறிஸ்துவின் பலிமரணத்தில் விசுவாசம் வைக்கும் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள். நிபந்தனையற்றது, இறுதியானது (கலாத்தியர் 3:13–29).

## உலகத்தோற்ற முதல் நோவா காலத்தில் ஏற்பட்ட வெள்ளம் வரை

ஏதேன் தோட்டத்தின் உடன்படிக்கை (ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பாக). ஆதாமுடன் உடன்படிக்கை (ஆதாம் பாவம் செய்த பிற்பாடு) இவற்றின் சுருக்கம் :

## I. ஏதேன் தோட்டத்தின் உடன்படிக்கை : (ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு)

அ. அறியாமையின் காலத்தில் தேவன் மனிதனோடு ஏற்படுத்திய உடன்படிக்கை.

ஆ. அறியாமையின் காலத்தில் மனிதனுடைய ஜீவியத்தை இப்பூமியில் நிர்ணயம் செய்தது.

இ. வேத வசனங்கள் : ஆதியாகமம் 1:26 முதல் 3:6 வரை

சாவி வார்த்தைகள் : ஆதியாகமம் 1:28; 2:15–17. ஏதேன் தோட்டத்திலிருந்து மனுஷனைத் துரத்திவிடுதல் (ஆதியாகமம் 3:24)

ஈ. பெரிய அடிப்படைக் கொள்கைகள் :

1. மனிதன் பலுகிப்பெருகி, பூமியை நிரப்ப வேண்டும் (ஆதியாகமம் 1:28).
2. மனிதன் பூமியை தனக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளவேண்டும் (ஆதியாகமம் 1:28).
3. மனிதன் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துகளையும் ஆண்டுகொள்ள வேண்டும் (ஆதியாகமம் 1:28).
4. மனிதன் ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தி, காத்து, அதிலுள்ள கனிவகைகளைப் புசித்துக்கொள்ளலாம் (ஆதியாகமம் 2:15–16).
5. ஒரு சிறிய பரீட்சை : மனிதன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கக்கூடாது (ஆதியாகமம் 2:17).
6. ஸ்திரீயானவள் அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான் (ஆதியாகமம் 3:6,11,17). (ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள் (1 தீமோத்தேயு .2:14). இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது (ரோமர் 5:12).
7. மனிதனை ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்திவிட்ட அந்த நாளோடு அறியாமையின் காலம் முடிவடைகிறது (ஆதியாகமம் 3:14–24).
8. இரண்டாம் மனிதனாக கிறிஸ்து காணப்படுகிறார். முதலாம் ஆதாம் இழந்துபோன எல்லாவற்றையும் இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து சம் பாதித்துவிட்டார் (1 கொரிந்தியர் 15:20–22; 45–49; கொலோசெயர் 2:10; ரோமர் 5:17–19).
   - i) ஆதாம் கீழ்ப்படியவில்லை. கிறிஸ்து கீழ்ப்படிந்தார் (மத்தேயு 17:5; யோவான் 4:34; 17:3; பிலிப்பியர் 2:8).
   - ii) ஆதாம் சாத்தானின் வல்லமைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தான்–கிறிஸ்து சாத்தானின் வல்லமையை மேற்கொண்டார் (மத்தேயு 4:10,11).
   - iii) ஆதாம் தேவனுடைய சத்தியத்தையும், அன்பையும் தள்ளிவிட்டான். கிறிஸ்து இவைகளை வெளிப்படுத்தினார் (யோவான் 1:17).
   - iv) ஆதாம் தேவனுடைய பிரசன்னத்தை இழந்துபோனான்–கிறிஸ்துவுக்குள் அதை நாம் மறுபடியும் பெற்றுக்கொள்ளுகிறோம் (எபேசியர் 2:13).
   - v) ஆதாம் தேவனோடுள்ள ஐக்கியத்தை இழந்துபோனான். கிறிஸ்துவுக்குள் இது புதுப்பிக்கப்பட்டது (1 யோவான் 1:3–7).
   - vi) ஆதாம் தன்னுடைய நிலையையும், ஆளுகையையும் இழந்து போனான். கிறிஸ்து மூலமாக இதை நாம் பெற்றுக் கொள்ளுகிறோம் (ரோமர் 8:16,17; 2 தீமோத்தேயு 2:12; வெளி. 5:10).
   - vii) முள்,துக்கம், வேர்வை, சாபம் இவையனைத்தும் ஆதாம் விழுந்துபோன காரணத்தினால் ஏற்பட்டவைகளாகும்.
9. தேவனாகிய கர்த்தர் விழுந்துபோன ஆதாமுக்கும், அவன் மனைவிக்கும் அற்புதமாக தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார் (ஆதியாகமம் 3:21).

## II. ஆதாமுடன் உடன்படிக்கை : (ஆதாம் பாவம் செய்த பிற்பாடு)

அ. மனச்சாட்சியின் காலத்தில் தேவன் மனிதனோடு செய்த உடன்படிக்கை (ஏதேன் தோட்டத்திலிருந்து ஆதாமை துரத்தி விட்ட நாளிலிருந்து நோவாவின் காலத்தில் ஏற்பட்ட ஜலப்பிரளயம் வரைக்கும்).

ஆ. விழுந்துபோன மனிதனின் ஜீவியத்தைத் தகுந்த நிலைக்கு கொண்டுவருகிறது. மீட்பர் வருவார் என்ற வாக்குத்தத்தமும் கொடுக்கப்படுகிறது. மனச்சாட்சியானது கிறிஸ்துவின் இராஜ்ஜியம் வரைக்கும் தொடர்ந்திருக்கும் (ரோமர் 8:21).

இ. வேதவசனங்கள் : ஆதியாகமம் 3:14–19.

ஈ. பெரிய அடிப்படைக் கொள்கைகள்: (மனிதனுக்கு ஒழுக்க சம்பந்தமான பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருந்தது)

1. சர்ப்பமானது சபிக்கப்பட்டது (ஆதியாகமம் 3:14; 2 கொரிந்தியர் 11:3; வெளி. 12:9). சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்தில் உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும் உயர்த்தப்பட்டார் (எண்ணாகமம் 21:5–9, யோவான் 3:14,15).
2. மீட்பர் இவ்வுலகத்திற்கு வருவார் என்ற முதல் வாக்குத்தத்தம் (ஆதியாகமம் 3:15).

   <u>குறிப்பு :</u> இங்கே முரண்பாடான காலங்கள் ஆரம்பமாகிவிட்டது.
3. ஸ்திரீயின் நிலை மாறிவிட்டது (ஆதியாகமம் 3:16).
   - i) அநேகமுறை கர்ப்பவதியாயிருக்கும் நிலை
   - ii) குழந்தையை ஈன்றெடுக்கும் பொழுது அதிகவேதனை
   - iii) புருஷன் மனைவியை ஆண்டுகொள்வான்

   <u>குறிப்பு :</u> பாவமானது மனித வாழ்க்கையில் ஒரு புதியமுறையைக் கொண்டு வந்தது (எபேசியர் 5:22–25; 1 தீமோத்தேயு 2:11–14).
4. ஏதேன் தோட்டத்தில் இலகுவான வேலை (ஆதி. 2:15). பாவத்திற்கு பிற்பாடு கடினமான வேலை (ஆதியாகமம் 3:18,19). காரணம் ஆதாமினிமித்தம் பூமியானது சபிக்கப்பட்டது (ஆதியாகமம் 3:17).
5. வாழ்நாளெல்லாம் வருத்தம் (ஆதியாகமம் 3:17)
6. குறுகியகால வாழ்க்கை – மரணம் நிச்சயம் (யாக்கோபு 1:15; ரோமர் 6:23).
7. கிறிஸ்து ஸ்திரீயின் வித்தாகக் காணப்படுகிறார் (கலாத்தியர் 4:4,5; 1 யோ. 3:8)

## நோவாவுடன் உடன்படிக்கை :

### I. தேவன் நோவாவோடு செய்த உடன்படிக்கை எங்கு காணப்படுகிறது?

ஆதியாகமம் 9:1–17,29.

### II. இந்த உடன்படிக்கை எப்பொழுது கொடுக்கப்பட்டது?

ஜலப்பிரளயத்திற்குப் பிற்பாடு இந்த உடன்படிக்கை கொடுக்கப்பட்டது. மனச்சாட்சியின் காலத்தில் மனிதன் தோல்வியடைந்தான். தேவனை ஒருவரும் தேடவில்லை. எனவே தேவன் மனித அரசாங்கத்தின் காலத்தில் (யுகத்தில்) நோவாவோடு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார்.

### III. இந்த உடன்படிக்கையின் பிரதான நோக்கம் என்ன?

பாவத்தைக் கட்டுப்படுத்துவதற்கான கோட்பாடுகளை உருவாக்கும் வகையில் இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப் பட்டது, ஆதாமின் உடன்படிக்கையின் கீழ் உள்ள மனித வாழ்க்கையின் நிலையை மறுபடியும் உறுதிப்படுத்தும் வகையில் இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

### IV. இந்த உடன்படிக்கை யாருடன் ஏற்படுத்தப்பட்டது?

தேவன் மனித இனத்தோடு செய்த ஒரு ஒப்பந்தம் ஆகும் (ஆதியாகமம் 9:9).

### V. இந்த உடன்படிக்கை அளிக்கக்கூடிய பெரிய காரியங்கள் யாவை?

அ. மரணதண்டனை ஏற்படுத்தப்பட்டது. அரசாங்கத்தின் பிரதான பணி மனிதஇனத்தின் பரிசுத்தத்தன்மையைக் காப்பது. சட்டதிட்டங்களின் மூலமாக பரிசுத்தத்தன்மையை காக்கும் பொருட்டு மனிதனுக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவனுடைய உயிருக்குப் பதிலாக மற்றொருவனுடைய உயிர் எடுக்கப்பட்டாவது மனித வாழ்க்கையில் பரிசுத்தத்தன்மையானது காக்கப்படவேண்டும் (ஆதியாகமம் 9:5,6).

குறிப்பு :

1. இதற்கு முன் ஒருவன் மற்றொருவனுடைய உயிரை எடுக்க அனுமதிக்கப்படவில்லை (ஆதியாகமம் 4:10–15, 23).
2. இங்கே தேவன் தம்முடைய அதிகாரத்தை மனிதனுக்கு மாற்றிக்கொடுக்கிறார்.
3. மனிதனுக்கு இப்பொழுது இரண்டு வகையான தடைகள் : 1. மனச்சாட்சி 2. அரசாங்கம்.
4. ஒருவன் மற்றொருவனுக்குக் கீழ்ப்படிய கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறான்.

ஆ. பூமியின் மீது இதற்கு மேலாக சாபமிடப்படவில்லை (ஆதியாகமம் 8:21)

இ. இப்பூமியானது இனி ஒருபோதும் வெள்ளத்தால் அழிக்கப்படுவதில்லை (ஆதியாகமம் 9:10–16).

ஈ. இயற்கையின் வரிசைக்கிரமங்கள் உறுதிப்படுத்தப்பட்டது (ஆதியாகமம் 8:22–9:2).

உ. நடமாடுகிற ஜீவஜந்துக்களின் மாம்சத்தை மனிதன் புசிக்கலாம். ஆனால் அவைகளின் இரத்தத்தைப் புசிக்கக் கூடாது (ஆதியாகமம் 9:3,4)

ஊ. பல்வேறு வகையான தீர்க்கதரிசனங்கள் ஏற்படுத்தப்பட்டது :

1. கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் (ஆதியாகமம் 9:25,26).
2. சேம் தேவனாகிய கர்த்தரோடு ஒரு சிறப்பான ஐக்கியம் கொண்டிருப்பான் (ஆதியாகமம் 9:26,27). சேமுவினுடைய வம்சத்தின் மூலமாக தெய்வீக வெளிப்பாடு நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் சேமுவின் வம்சத்தில் வந்தவர்.
3. யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார் என்று உரைக்கப்பட்டிருக்கிறது (ஆதியாகமம் 9:27). அரசாங்கம், அறிவியல் இவற்றில் முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்தவர்கள் யாப்பேத் வம்சத்தினர். கூறப்பட்ட இந்த தீர்க்கதரிசனங்கள் முறையாக நிறைவேறி இருப்பதை நாம் வரலாற்றில் காணலாம்.

### VI. இந்த உடன்படிக்கையின் சிறப்பியல்புகள் என்ன?

அ) இந்த உடன்படிக்கைக்குச் சம்பந்தமான சில காரியங்கள் தற்காலிகமானது. கர்த்தராகிய கிறிஸ்து இவ்வுலகத்தில் தம்முடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க வரும்போது அவைகள் நீக்கப்படும் (வெளி. 19:11– 16). கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் வரைக்கும் மனிதன் அரசாங்கத்திற்கு பொறுப்புள்ளவனாக இருக்கிறான்.

ஆ) அன்றைக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நிபந்தனையற்றது. இருப்பினும் இன்றைக்கும் அவைகள் பலன் அளிக்கக்கூடியதாய் இருக்கிறது.

### VII. இந்த உடன்படிக்கையின் உத்திரவாதம் என்ன?

வானவில் (ஆதியாகமம் 9:12 – 17).

### VIII. மனிதனின் வீழ்ச்சி :

மனிதன் நீதியின்படி ஆட்சி செய்யவில்லை (ஆதியாகமம் 11:9). பாஷைகள் தாறுமாறாக்கப்பட்டது. தேசங்கள் உருவாக ஆரம்பித்தது.

### IX. கிறிஸ்து எப்படி காணப்படுகிறார்?

சேமுவின் பிரதான குமாரன் (கொலோசெயர் 2:9; 2:3; யோவான் 1:17; 8:12). கிறிஸ்து சேமுவினுடைய வம்சத்திலிருந்து வந்தவர் (ஆதியாகமம் 9:26,27).

## ஆபிரகாமுடன் உடன்படிக்கை (ஆபிரகாமும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமும்)

### I. இந்த உடன்படிக்கை எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது?

மனிதன் பாபேலில் விழுந்து போனதற்கு பிற்பாடு. அதாவது மனித அரசாங்கத்தின் காலம் நிறைவேறின பிற்பாடு இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. வாக்குத்தத்தத்தின் காலத்தில் இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

### II. இந்த உடன்படிக்கை எங்கு காணப்படுகிறது?

ஆதியாகமம் 12:1–3, 6,7; 13:14–17; 15:1–21; 17:1–14; 22:15–18.

### III. இந்த உடன்படிக்கையின் நோக்கம் என்ன?

இந்த உடன்படிக்கையின் மூலமாக இஸ்ரவேல் தேசம் உருவாக்கப்பட்டது. மீட்பின் வாக்குத்தத்தம் அதிக வெளிப்பாட்டோடு உறுதிப்படுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கை தேவனுடைய நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.

இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தேவன் கொண்டிருக்கிற திட்டத்தை ஆபிரகாம் மூலம் நிறைவேற்ற இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இஸ்ரவேல் ஜனத்தின் மூலமாக இரட்சகரை உலகத்திற்குக் கொடுக்க இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

## IV. இந்த உடன்படிக்கை யாருடன் ஏற்படுத்தப்பட்டது?

குறிப்பாக ஆபிரகாமோடு இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் இந்த உடன்படிக்கையானது இஸ்ரவேல், புறஜாதி, சபை இவையனைத்தையும் உள்ளடக்குகிறதாயிருக்கிறது. இந்த உடன்படிக்கை ஈசாக்கோடும். யாக்கோபோடும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது (ஆதியாகமம் 17:19; 28:12, 13).

## V. இந்த உடன்படிக்கையில் அடங்கியுள்ள முக்கிய காரியங்கள் எவை?

அ. **நிலம் :** ஆதியாகமம் 13:15; 15:7; 18:21 எல்லை குறிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் ஜனங்களுக்காக இந்நிலம் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. பாலஸ்தீன உடன்படிக்கையில் இது தெளிவாய் விரிவாக்கப்பட்டிருக்கிறது.

ஆ. **சந்ததி :** ஆதியாகமம் 13:15; 15:5. இயற்கையான ஆபிரகாமின் சந்ததிகள் உண்டு. கிறிஸ்துவோ ஆபிரகாமின் சந்ததி (கலாத்தியர் 3:16). ஒவ்வொரு விசுவாசியும் ஆவிக்குரிய நிலையில் ஆபிரகாமின் சந்ததியாய் இருக்கிறார்கள் (ரோமர் 4:13–16; கலாத்தியர் 3:6–9). தாவீதின் உடன்படிக்கையில் இது நிறைவேறிற்று.

இ. **ஆசீர்வாதம் :** அநேக வழிகளில் இது நிறைவேறிற்று. புதிய உடன்படிக்கையின் கீழ் தெளிவாக அறிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

## VI. இந்த உடன்படிக்கையின் சிறப்பியல்புகள் என்ன?

இந்த உடன்படிக்கை நித்தியமானது, நிபந்தனையற்றது (ஆதியாகமம் 12:2; 17:7,8). **ஆதாரம் :**

1. பெரிய உடன்படிக்கைகள் அனைத்தும் நித்தியமானது, நிபந்தனையற்றது.
2. விருத்தசேதனத்தோடு இது நிறைவு பெறவில்லை (ஆதியாகமம் 17:9,10; ரோமர் 4:9–12). இந்த வசனங்களை ஒப்பிட்டு வாசித்துப் பார்க்கவும்.
3. விருத்தசேதனம் ஏற்படுத்துவதற்கு முன்பே இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டாயிற்று.
4. இந்த உடன்படிக்கையானது மாற்றமுடியாது என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (எபிரெயர் 6:13–18).
5. இஸ்ரவேல் ஜனத்தைக் குறித்ததான வெளிப்பாட்டை பழைய, புதிய ஏற்பாடுகளில் சரியாக வியாக்கியானம் செய்வதற்கு ஒரு நிபந்தனையற்ற தன்மைத் தேவைப்படுகிறது.
6. இந்த உடன்படிக்கையின் பகுதி நிறைவேறிவிட்டது. எனவே இன்னும் இருக்கக்கூடிய காரியங்களும் நிறைவேறும் என்பதில் சந்தேகம் இல்லை.

## VII. ஆபிரகாமின் உடன்படிக்கையில் ஒருபகுதி நிறைவேறிவிட்டது. இன்னும் ஒருபகுதி நிறைவேறவேண்டும் என்று சொல்லக் கூடிய கருத்துக்கு மாறான கருத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1. சரித்திர ரீதியில் இந்த உடன்படிக்கை நிறைவேறிவிட்டது (இக்கருத்து உண்மையல்ல).
2. விருத்தசேதனம் இந்த உடன்படிக்கையின் நிறைவேறுதலாயிருக்கிறது (இக்கருத்து உண்மையல்ல).
3. எப்பொழுதும் கீழ்ப்படிதல், ஆசீர்வதிக்கப்படுவதற்கான நிபந்தனை ஆகும் (இக்கருத்து உண்மையல்ல).
4. கிறிஸ்துவுக்குள் இந்த உடன்படிக்கை நிறைவேறிவிட்டது (முழுமையாக நிறைவேறவில்லை–வாக்குத்தத்தம் செய்த தேசம் இன்னும் முழுமையாக கொடுக்கப்படவில்லை).

## VIII. இந்த உடன்படிக்கை அளிக்கக்கூடிய காரியங்கள் யாவை?

அ. இந்த உடன்படிக்கை ஒருபெரிய தேசம் உருவாவதற்கும், பாதுகாக்கப்படுவதற்கும் உத்தரவாதம் கொடுக்கிறது (ஆதியாகமம் 12:2).

1. இஸ்ரவேல் ஜனங்களில் இந்த உடன்படிக்கை நிறைவேறிற்று. யாருக்கு இந்த தேசத்தை நித்திய சுதந்தரமாக கொடுப்பேன் என்று வாக்குப்பண் ணினாரோ அவர்களிடத்தில் இது நிறைவேறிற்று (ஆதியாகமம் 17:8).
2. இஸ்ரவேல் ஜனங்கள் தொடர்ந்திருப்பார்கள் என்பதை இந்த உடன்படிக்கை உறுதிப்படுத்துகிறது.
3. இஸ்ரவேல் ஜனங்கள் வசிக்கக்கூடிய தேசத்திற்கு 'இஸ்ரவேல்' என்ற தலைப்பைத் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே வருகிறது.
4. திரளான ஜனங்களுக்கு ஆபிரகாம் தகப்பனானார் (ஆதியாகமம் 17:4).

ஆ. தேவன் ஆபிரகாமுக்கு தனிப்பட்ட முறையில் அநேக வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார் (ஆதியாகமம் 12:2,3).

1. அநேக வம்சங்களுக்கு தகப்பனாக இருப்பார் (ஆதியாகமம் 17:16).
2. தனிப்பட்ட நிலையில் ஆசீர்வாதத்தை பெறுதல். ''நான் உன்னை ஆசீர்வதிப்பேன்.''
   i) இஸ்ரவேல் மூலமாக :
   ii) ஆபிரகாமின் மாதிரியின் மூலமாக – ரோமர் 4:19–25.
   iii) கிறிஸ்து மூலமாக – கலாத்தியர் 3:16.
3. தேவன் புறஜாதிகளுக்கு சில வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார் (ஆதியாகமம் 12:3).
   1. ''உன்னை ஆசீர்வதிப்பவர்களை ஆசீர்வதிப்பேன்''.
   2. ''உன்னை சபிக்கிறவர்களை சபிப்பேன்.'' இதை வரலாற்றிலிருந்து நாம் தெளிவாக அறிந்து கொள்ளுகிறோம்.

      **குறிப்பு :** யோவேல் 3:1–8; சகரியா 14:1–3; மத்தேயு 25:33–46.
   3. ''பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.'' சுவிசேஷத்தின் வாக்குத்தத்தம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கிறிஸ்துவுக்குள் நிறைவேறிற்று. இரட்சிப்பின் உபதேசத்தில் இந்த உடன்படிக்கை முக்கிய இடத்தை வகிக்கிறதை நாம் பார்க்கிறோம்.

      **குறிப்பு :** ரோமர் 4:3; கலாத்தியர் 3:6–9,14,16,29; 4:22–31.

**IX. இந்த உடன்படிக்கை தீர்க்கதரிசனங்களோடு சம்பந்தப்படுத்துகிறது :**

இந்த உடன்படிக்கை சரியாக, நித்தியமானதாக இருந்தால் :

அ. இஸ்ரவேல் நாடு பாதுகாக்கப்படவேண்டும். மனந்திரும்பி மறுபடியுமாக தங்கள் சொந்த தேசத்திலே கூட்டிச் சேர்க்கப்பட வேண்டும். எதிர்காலம் நிச்சயப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆ. 'இஸ்ரவேல்' என்ற தலைப்பானது பாலஸ்தீனா தேசத்திற்கு உத்தரவாதமாக வழங்கப்பட்டிருக்கிறது.

இ. இந்த வாக்குத்தத்தங்கள் சபையில் நிறைவேறவில்லை.

1. புதிய ஏற்பாட்டில் 'புறஜாதிகள்', ஆபிரகாமின் சந்ததியாகிய 'இஸ்ரவேல்' என்று வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கிறது. (அப்போஸ்தலர் 3:12; 4:8; 21:28; ரோமர் 10:1).
2. சபை ஸ்தாபிக்கப்பட்ட பிற்பாடு 'இஸ்ரவேல்' தேசம் என்று அழைக்கப்பட்டிருக்கிறது.
3. 'யூதர்கள்' என்ற பதமானது தொடர்ந்து வழக்கத்திலிருந்து வருகிறது.
4. ஆபிரகாமின் சந்ததி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரிக்கும்.
5. புதிய ஏற்பாட்டில் சபை, இஸ்ரவேல் ஜனம் என்று வேறுபடுத்திக் காட்டப்பட்டிருக்கிறது (ரோமர் 11:1–25; 1 கொரிந்தியர் 10:32). தேவனுடைய உடன்படிக்கைத் திட்டத்தில் இஸ்ரவேல் வகிக்கும் ஸ்தானத்தை சபை எடுத்துக்கொள்வது கிடையாது. சபையானது இஸ்ரவேல் அல்ல.
6. சபையானது ஆசீர்வாதத்தைப் பெறக்கூடிய ஒன்றாயிருக்கிறது. கிறிஸ்துவுக்குள் சபையானது ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறது (கலாத்தியர் 3:6–9,16). ஆபிரகாமின் விசுவாச மாதிரிக்கு கர்த்தரை ஸ்தோத்தரிப்போம். நீதியின் வாக்குத்தத்தத்திற்காக கர்த்தரை ஸ்தோத்தரிப்போம் (ரோமர் 3:22; 4:11).

## சீனாய் மலையிலிருந்து இடிமுழக்கம் – மோசேயுடன் உடன்படிக்கை :

**I. இந்த உடன்படிக்கை எங்கு காணப்படுகிறது?**

யாத்திராகமம் 19:5–31:18. குறிப்பு : 19:16; 20:18.

**II. இந்த உடன்படிக்கை எப்பொழுது ஏற்படுத்தப்பட்டது?**

அ. வாக்குத்தத்தத்தின் காலம் நிறைவேறின பிற்பாடு (வாக்குத்தத்தத்தின் காலத்தில் ஜனங்கள் வீழ்ச்சியடைந்தனர்) இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

ஆ. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து மீட்கப்பட்ட பிற்பாடு இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

இ. நியாயப்பிரமாண கால ஆரம்பத்தில் இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

## III. இந்த உடன்படிக்கை யாரோடு ஏற்படுத்தப்பட்டது?

இஸ்ரவேல் ஜாதியோடு இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது (யாத்திராகமம் 19:6).

## IV. இந்த உடன்படிக்கையின் தன்மை என்ன?

அ. நிபந்தனைக்கு உட்பட்டது (யாத்திராகமம் 19:5 –''நீங்கள் கைக்கொண்டால். . .'').

ஆ. ஆபிரகாமின் உடன்படிக்கையோடு ஒப்பிட்டு பாருங்கள் (ஆதியாகமம் 12:2,3–''நான் உன்னை ஆசீர்வதிப்பேன்'' என்ற வார்த்தையைப் பார்க்கிறோம்).

இ. இந்த உடன்படிக்கையில் கட்டளைகள் வாக்குத்தத்தத்திற்கு முந்திக் கொள்கின்றன. ஆபிரகாமின் உடன்படிக்கையில் வாக்குத்தத்தம் முந்தி வருகிறது. நிறைவேற்றவேண்டிய காரியங்கள் பிற்பாடு வருகிறது.

## V. இந்த உடன்படிக்கையின் அடையாளம் என்ன?

ஓய்வுநாள் (யாத்திராகமம் 31:12–17). இது தேவனுடைய வாக்குத்தத்தத்தை தொடர்ந்து நினைவுபடுத்துகிற ஒன்றாயிருக்கிறது. அவர்களுடைய பொறுப்புகளிலிருந்தும், பணியிலிருந்தும் ஓய்ந்திருக்க வேண்டுமென்று நினைவுபடுத்துகிறது.

## VI. இந்த உடன்படிக்கையின் வரம்பு என்ன?

இதில் மூன்று பிரிவுகள் உள்ளது.

அ. கட்டளைகள் – யாத்திராகமம் 20:1–26.

இவைகள் தேவனுடைய நீதியுள்ள சித்தத்தை தெரிவிக்கிறது.

ஆ. நியாயத்தீர்ப்புகள் – யாத்திராகமம் 21:1–24:11.

இவைகள் இஸ்ரவேல் ஜனங்களின் சமுதாய வாழ்வை ஆளுகை செய்கிறதாய் இருக்கிறது.

இ. நியமங்கள் – யாத்திராகமம் 24:12–31:18.

இவைகள் இஸ்ரவேல் ஜனங்களின் மதசம்பந்தமான வாழ்வை ஆளுகை செய்கிறதாய் (கட்டுப்படுத்துகிறதாய்) இருக்கிறது.

ஈ. இந்த மூன்று பிரிவுகளும் பொதுவாக நியாயப்பிரமாணம் என்று அழைக்கப்படுகிறது (மத்தேயு 5:17,18).

## VII. இந்த உடன்படிக்கையின் பிரதான நிபந்தனை :

கீழ்ப்படிதல் (யாத்திராகமம் 19:5).

## VIII. இஸ்ரவேலின் வீழ்ச்சியும், தேவனுடைய நியாயத்தீர்ப்பும் :

அ. 2 இராஜாக்கள் 17:7

ஆ. உபாகமம் 28:63 (2 நாளாகமம் 36:15,16; அப்போஸ்தலர் 7:41,42).

## IX. இஸ்ரவேல் ஜனங்களின் வீழ்ச்சி, தேவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டதா?

ஒருபோதும் அல்ல (கலாத்தியர் 3:17,18).

## X. இந்த உடன்படிக்கையின் காலம் எதுவரை நீடிக்கும்?

'கிறிஸ்து வரைக்கும்'

அ. மத்தேயு 5:17 – ''நிறைவேற்றுவதற்கே வந்தேன்''

ஆ. கலாத்தியர் 3:24 – ''கிறிஸ்து வரைக்கும்''

இ. ரோமர் 10:4 – ''கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்''

ஈ. கலாத்தியர் 3:19 – ''வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும்''

## XI. இந்த உடன்படிக்கையின் நோக்கம் என்ன?

இந்த உடன்படிக்கை நேரான, எதிர்மறையான நோக்கங்களைக் கொண்டதாய் இருக்கிறது.

**அ. நேரான நோக்கம் :**

i) இந்த உடன்படிக்கை நல்லொழுக்க முறைகளைக் கொண்டதாயிருக்கிறது (உபாகமம் 6:24). அவர்களின் நலனுக்காக கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவருகிற உபாத்தியாய் இருக்கிறது (கலாத்தியர் 3:24).

ii) பலிகளின் இரத்தத்திலே மூடப்பட்ட ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் கீழாக வாழ்ந்து கொண்டிருக்கிற ஜனங்களுக்கு ஒரு சட்டமாக இந்த உடன்படிக்கைக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

<u>குறிப்பு:</u> பஸ்காவின் ஆட்டுக்குட்டி (யாத்திராகமம் 12:13).

iii) தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் பரிசுத்தத்தன்மையை வெளிப்படுத்துவதற்காக இந்த உடன்படிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது (யாத். 19:5,6).

iv) நியமங்களின் மூலமாக, இஸ்ரவேல் ஜனங்களுக்காகத் தேவனிடத்தில் பேசக்கூடிய பிரதிநிதியும் (பிரதான ஆசாரியன்) அவர்களுடைய பாவத்தை மூடுவதற்கான பலிகளும், ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது (லேவியராகமம் 16:16; 17:11).

v) பலிகள், ஆசரிப்புகூடாரம், பிரதான ஆசாரியன் இவைகளனைத்தும் கிறிஸ்து, சிலுவை இவைகளை எதிர்நோக்கி கொண்டிருந்தன (எபிரெயர் 9:6–14).

**ஆ. எதிர்மறையான நோக்கம் :**

i) பாவத்தின் நிமித்தமாக இந்த உடன்படிக்கைக் கொடுக்கப்பட்டது (கலாத்தியர் 3:19; ரோமர் 7:7; 3:20).

ii) வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கு இவை கொடுக்கப்பட்டது (ரோமர் 3:19).

iii) தண்டனைக்கு உட்படுத்துகிறதாயிருந்தது (2 கொரிந்தியர் 3:7–9).

iv) நீதிமானாக்கப்படுவதற்கு ஒரு கருவியாக இது கொடுக்கப்பட்டிருக்கிறது (கலாத்தியர் 2:16,21).

## XII. கிறிஸ்தவனும், மோசேயின் உடன்படிக்கையும்:

அ. நிச்சயமாக நியாயப்பிரமாணத்தின் கீழ் அல்ல.

1. ரோமர் 6:14 – ''கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால்''
2. ரோமர் 3:21,22 – ''நியாயப்பிரமாணமில்லாமல்''
3. ரோமர் 10:4 – ''கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்''
4. பிலிப்பியர் 3:9 – ''நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல்''
5. எபிரெயர் 10:11–17 – ''புதிய கிருபையின் உடன்படிக்கை''

ஆ. நியாயப்பிரமாணமும், கிருபையும் :

| **நியாயப்பிரமாணத்தின் கீழ்** | **கிருபையின் கீழ்** |
|---|---|
| 1. மேய்ப்பனுக்காக ஆடு மரிக்கிறது | 1. ஆட்டிற்காக மேய்ப்பன் மரிக்கிறான் |
| 2. அனைவரும் மரித்துப்போனார்கள் | 2. அனைவரும் பிழைக்கும்படி செய்யப்பட்டனர் |
| 3. தேவன் சொல்லுகிறார், 'நீ அதைச் செய்யாதே' | 3. தேவன் சொல்லுகிறார் 'நான் அதைச் செய்வேன்' |
| 4. அனைவரும் தண்டனைக்கு உட்படுத்தப்படுகின்றனர் | 4. விசுவாசிகள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவதில்லை |
| 5. நிபந்தனைக்கு உட்படுத்தப்பட்டது | 5. நிபந்தனையற்றது |
| 6. நீதி கேட்கப்படுகிறது | 6. நீதி கொடுக்கப்படுகிறது |
| 7. தற்காலிகமானது | 7. நிரந்தரமானது |

இ. யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் நோக்கத்தைச் சரியாக அறிந்துகொள்ள தவறிவிட்டார்கள். அவர்களுடைய சொந்தக் கிரியைகளின் மூலமாக நீதியைச் சம்பாதித்துக்கொள்ள முயற்சி செய்தார்கள் (1 தீமோத்தேயு 1:8,9; ரோமர் 9:31–10:4). இன்றைக்கும் அநேகர் இந்த தவறைச் செய்கிறார்கள்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## யுகங்களில் தேவனுடைய திட்டம் – பெரிய, சிறிய உடன்படிக்கைகள்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

### சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்

1. வேதாகமத்தில், உடன்படிக்கை என்பது :

a. யுகங்களுக்கான தேவனுடைய திட்டம்

b. தேவன் சட்டத்தை மனிதனுக்காக உருவாக்குகிறார்

c. தேனுக்கும் மனிதனுக்கும் இடைய உள்ள ஒப்பந்தம்

2. உடன்படிக்கைகள் இந்த இரண்டு வகைகளில் பிரிக்கப்படலாம் :

a. தேவனாலே கொடுக்கப்பட்டது, மனிதனாலே ஏற்படுத்தப்பட்டது

b. தற்காலிகமான, நித்தியமானது

c. யுகங்களுக்கான தேவனின் திட்டம், ஒரு சந்ததிக்கான தேவனின் திட்டம்

3. உடன்படிக்கைகளைப் படிப்பது அவசியம் என்ன?

a. 'உடன்படிக்கை' என்கிற வார்த்தையைப் புரிந்துகொள்வதற்கு

b.ஆவிக்குரிய கிறிஸ்தவனாக இருப்பதற்கு

c. வேதாமத்தைக் குறித்து தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு

4. கீழே உள்ளவைகளில் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கைகள் எவை?

a. ஏதேன் தோட்டத்தில் உடன்படிக்கை b. ஆதாமுடன் உடன்படிக்கை

c. நோவாவுடன் உடன்படிக்கை d. யூதாவுடன் உடன்படிக்கை

e. ஆபிரகாமுடன் உடன்படிக்கை f. மோசேயுடன் உடன்படிக்கை

g. இஸ்ரவேலுடன் உடன்படிக்கை h. ஆரோனுடன் உடன்படிக்கை

i. பாலஸ்தீன உடன்படிக்கை j. தாவீதுடன் உடன்படிக்கை

k. புதிய உடன்படிக்கை

5. ஆதியாகமம் 1:28–ம் வசனத்தின்படி, மனிதன் பலுகிப் பெருகி இந்தப் பூமியை நிரப்ப வேண்டும், இது எந்த உடன்படிக்கைக்குப் பொருந்தும் ?

a. ஆரோனுடன் உடன்படிக்கை

b. ஏதேன் தோட்டத்தில் உடன்படிக்கை

c. ஆதாமுடன் உடன்படிக்கை

6. பொருத்துக :– ஆதாமுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே காணப்படும வேற்றுமைகள் ? **(கொடுக்கப்பட்டிருக்கும் வேற்றுமைக்கு முன்பு சரியான வசனத்தை எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| ———————— | ஆதாம் கீழ்ப்படியவில்லை – கிறிஸ்து கீழ்ப்படிந்தார் | a. 1 யோவான் 1:3–7 |
| ———————— | ஆதாம் சாத்தானுக்கு கீழ்ப்படிந்தான் – கிறிஸ்து சாத்தானை மேற்கொண்டார் | b. பிலிப்பியர் 2:8,9 |
| ———————— | ஆதாம் தேவனோடு உள்ள உறவை இழந்துபோனான் – கிறிஸ்து ஐக்கியத்தைப் புதுப்பித்தார் | c. மத்தேயு 4:10,11 |

7. ஆதியாகமம் 3:14–19 உள்ள வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள உடன்படிக்கை யாது?

a. ஏதேன் தோட்டத்தில் உடன்படிக்கை

b. யூதாவுடன் உடன்படிக்கை

c. ஆதாமுடன் உடன்படிக்கை

8. மீட்பர் எந்த உடன்படிக்கையின் கீழ் முதலாவது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டார் ?

a. ஏதேன் தோட்டத்தில் உடன்படிக்கை

b. யூதாவுடன் உடன்படிக்கை

c. ஆதாமுடன் உடன்படிக்கை

9. மனித அரசாங்க யுகத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை என்ன?

a. யூதாவுடன் உடன்படிக்கை

b. ஆதாமுடன் உடன்படிக்கை

c. நோவாவுடன் உடன்படிக்கை

10. நோவாவுடன் உடன்படிக்கை காலத்தில் மரண தண்டனையைக்குறித்து தேவன் சொல்லியிருப்பது என்ன?

a.அனுமதிக்கப்படவில்லை

b. கொலை செய்தால் மட்டுமே அனுமதிக்கப்பட்டது

c. ஸ்தாபிக்கப்பட்டது

11. நோவாவுடன் உடன்படிக்கையின் அச்சாரம் என்ன?

a. வானவில்

b. மீட்பருக்கான தேவனின் வாக்குத்தத்தம்

c. இரட்சிப்புக்கான தேவனின் திட்டம்

12. ஆபிரகாமுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை

a. நிபந்தனையுள்ளது b. நிபந்தனையற்றது c. நிபந்தனையும், நிபந்தனையற்றதும்

13. மோசேயின் உடன்படிக்கை யாருடன் ஏற்படுத்தப்பட்டது ?

a. மோசே b. இஸ்ரவேல் தேசம் c. மீட்பர் வரும் யூதா கோத்திரம்

14. மோசேயின் உடன்படிக்கையின் அடையாளம் என்ன?

a. *வானவில்* b. ஓய்வுநாள் c. விருத்தசேதனம்

15. நியாயப்பிரமாணத்தின் நோக்கத்தை யூதர்கள் புரிந்துகொள்ளவில்லை, எனவே :

a. ஆலயத்தைக் கட்டினார்கள்

b. சொந்த தெய்வங்களை உண்டாக்கினார்கள்

c. தங்கள் கிரியைகள் மூலம் நீதியை உருவாக்கினார்கள்

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________